தினத் தந்தி
DAILY THANTHI
பெங்களூரு (23-11-2014) ஞாயிற்றுக்கிழமை
மலர்-73 இதழ் 23
வெல்க தமிழ்
ஜய ஸ்ரீ கார்த்திகை மீ 7 உ
ஹிஜிரி 1436 முகரம் 29

# கருத்தரங்கில் மத்திய மந்திரி அனந்தகுமார் பேச்சு

பெங்களூரு, நவ.23–

மனிதனுக்கு பாதிப்பு கொடுக்கும் மரங்கள் வளர்ப்புக்கு தடை விதிப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருவதாக மத்திய மந்திரி அனந்தகுமார் கூறினார்.

பெங்களூருவில் 'எதிர்காலத்தில் மரப்பொருட்கள் பயன்பாடு' என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கை மத்திய உரம் மற்றும் ரசாயனத்துறை மந்திரி அனந்தகுமார் தொடங்கி வைத்து பேசியதாவது:–



அனந்தகுமார்

## 60 சதவீத வனப்பகுதி

மனித வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கிருமி நாசினி மரங்களுக்கு தடை விதிப்பது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. இதன் மூலம் எத்தனையை உயிர்கள் பாதுகாக்கப்படும். இந்தியாவில் ஆண்டுக்கு 12 மில்லியன் டன் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. அடுத்த 6 ஆண்டுகளில் இதன் பயன்பாடு 20 மில்லியன் டன்னாக அதிகரிக்கும். இதனால் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதன் பயன்பாடு தேவைதானா? என்று அனைவரும் ஆலோசிக்க வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன்பு மொத்த நிலப்பரப்பில் 60 சதவீதம் வனப்பகுதி இருந்தது. அது தற்போது 20 சதவீதமாக குறைந்து உள்ளது. இதனால் சுற்றுச்சூழல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஒரு லட்சம் புலிகள் இருந்தன. அதன் எண்ணிக்கை தற்போது 1,800 ஆக குறைந்துள்ளது. கர்நாடகத்தில் வெறும் 300 புலிகள் மட்டுமே உள்ளது.

## உரிய நடவடிக்கை

நாம் வனத்தை நாசப்படுத்துகிறோமே தவிர அதை வளர்க்கவில்லை. மர அறிவியல் நிறுவனம் மற்றும் பிளாஸ்டிக் தொழில்நுட்ப நிறுவனம் இடையே ஒரு ஒருங்கிணைப்பு இல்லை. இன்னும் ஒரு மாதத்தில் இந்த 2 நிறுவனங்களும் சேர்ந்து ஆலோசித்து ஒரு திட்டத்தை வகுத்து கொடுத்தால் அதை மத்திய அரசிடம் தாக்கல் செய்து சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாய வனப்பகுதி அதிகரிக்க வேண்டும். விவசாய நிலங்களில் அடர்த்தியான மரங்களை வளர்க்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அனந்தகுமார் பேசினார்.

கருத்தரங்கில் முதன்மை வன பாதுகாவலர் சுகூர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.